2010 மே 12]

## (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் திருமதி டி. யசோதா.*

***திருமதி டி. யசோதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 149 முதல் 155 வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)*

## 8. அறிவிப்பு

### தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010-ஐப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 9. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு, 2010

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மற்றவற்றை நாளைக்குப் பார்ப்போம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் என்று சொன்னால், உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் என்று சொல்லிவிட்டேன். நாளைக்குப் பார்ப்போம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பொள்ளாச்சி ஜெயராமன், நீங்கள் கொடுத்தது இருக்கிறது. நாளைக்குப் பார்ப்போம், உட்காருங்கள்.

## 10. மானியக் கோரிக்கைகள், 2010-2011, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 47 - இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 45 - சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

---

**(அ) கோரிக்கை எண் 47 - இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2010-2011 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 47 - இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.